**ஐயம் :** எனக்கு அடிக்கடி இரத்தப் போக்கு ஏற்பட்டு விடுகிறது. அது போன்ற சமயங்களில் எப்போதேனும் மாதவிடாய் காலமும் வந்து மாதவிடாயும் ஏற்பட்டு விடுகிறது. இதனால் மாதவிடாய் நின்று விடுவதைத் தெரிந்து கொள்ள முடியவில்லை. இதுபோன்ற நேரங்களில் தொழுகையை எப்போது தொழுவது என்று தெரியவில்லை. நான் ஹனஃபீ மத்ஹபைச் சார்ந்தவள். இதைப்பற்றி 2 இஸ்லாமியப் பத்திரிக்கைகளுக்கு எழுதியதில் சில மாதங்களாகியும் எனக்கு பதில் கிடைக்கவில்லை. அந்நஜாத் பத்திரிகையாவது எனது பிரச்சனைக்குத் தீர்வைத் தர முடியுமா?

*R.A. நஷ்ரீத் பானு, க/பெ. A. ரியாஸ் அஹமது, சென்னை 1.*

**தெளிவு :** வரிசை முறையில் பதிலளிக்க எம்மிடம் பல கேள்விகள் முன்னுரிமை பெற்றிருப்பினும், தங்கள் கேள்வியின் முக்கியத்துவம் கருதி பதிலளிக்கிறோம்.

முதலில், அடிக்கடி ஏற்படும் இரத்தப் போக்கிற்காக சரியான மருத்துவரிடம் சிகிச்சை பெறுங்கள். தங்கள் பிரச்சனைக்கு இறைத்தூதர் கூறியுள்ள தீர்வை அந்நஜாத்தில் இடம் பெறச் செய்கின்றோம். அதற்கும் முன்பாக தங்களிடம் மனம் திறந்து சிறிது நேரம் மார்க்கம் பேச விரும்புகிறோம்.

மார்க்கத்தை அறிந்து கொள்ள ஆர்வம் கொண்டுள்ள தொழுகையாளியான தாங்கள், அல்லாஹ்வையும், அவன் இறக்கி அருள் புரிந்துள்ள நேர்வழிகாட்டியான அல்குர்ஆனையும், அல்லாஹ்வின் இறுதித் தூதர் முஹம்மது(ஸல்) அவர்களையும், அந்த இறுதித் தூதரின் போதனைகளான ஹதீஸ்களையும் முழுமையாக நம்புவீர்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

**நம்பிக்கைக்(ஈமான்)கொண்டவர்கள் தங்களை முஸ்லிம் என்றே சொல்லிக் கொள்ள வேண்டும்** (அல்குர்ஆன் 41:33) என்று அல்லாஹ் பரிசுத்தத் திருமறையில் கட்டளையிட்ட பின்பும், தங்களை 'ஹனஃபீ' என்று கூறுகிறீர்களே...?

தங்களுக்கு அல்லாஹ்வின்மீதும் குர்ஆனின்மீதும் நம்பிக்கையில்லையா?

அல்லாஹ்(ஜல்) தனது இறுதித் தூதரின் மூலமாக அறிவித்துத் தந்திருக்கின்ற மார்க்கத்தில் ஹனஃபீ, ஷாஃபிஈ, மாலிகி, ஹன்பலீ என்ற மத்ஹபுகளை அறிமுகப்படுத்தவில்லையே. நபி(ஸல்) அவர்களும், அவர்களுடைய எண்ணற்ற சஹாபாக்கள் எவருமே தம்மை ஹனஃபீ என்றோ, ஷாஃபிஈ, என்றோ, மாலிகி என்றோ, ஹன்பலீ என்றோ கூறிக்கொள்ளவில்லையே. இறுதித் தூதர்(ஸல்) அவர்களின் மறைவிற்குப் பிறகு, எண்ணற்ற சஹாபாக்கள், தாபியீன்கள், தபவுதாபியீன்கள், இமாம்கள் ஆகியோரின் கால கட்டத்திற்குப் பிறகு அறிமுகப்படுத்தப் பட்ட இந்த மத்ஹபுகளில் தன்னை இணைத்துக் கொள்ள உண்மை முஸ்லிம் எவ்வாறு முன் வருவார்? அப்படி இறைக்கட்டளையின் பேரில் மார்க்கத்தில் ஒன்றை அறிமுகப்படுத்த நபிமார்களுக்கு மட்டுமே அதிகாரம் உள்ளது. அப்படியிருக்க 4 மத்ஹபுகளை அறிமுகப்படுத்தியவர்கள் நபிமார்களா? நபிமார்கள்தான் என்றால், முஹம்மது நபி(ஸல்) அவர்களை இறுதித்தூதர் என்று தாங்கள் நம்பிக்கைக் கொள்ளவில்லையா?

இந்த 4 மத்ஹபுகளைப்பற்றி சொல்லப்படாத இறைத்தூதர்(ஸல்) அவர்களின் ஹதீஸ்களில் தாங்கள்

முழு நம்பிக்கை கொள்ளவில்லையா?

மார்க்கத்தின் தலைவர்களாக தாங்கள் எண்ணிக்கொண்டிருக்கும் ஹழ்ரத்மார்களையோ அல்லது வேறெந்த எப்பேர்ப்பட்ட பெரியார்களையோ நம்பிக் கொண்டு, குர்ஆன், ஹதீஸ் காட்டாத ஒன்றில் தாங்கள் ஹனஃபியாக இருப்பீர்களேயானால், நன்றாக அறிந்து கொள்ளுங்கள்! நிச்சயமாக அவர்களெல்லாம் நீங்கள் சுவர்க்கம் செல்லும் வழியைக் காட்டவில்லை; மாறாக நரகம் செல்லும் வழியையே காண்பித்துள்ளார்கள் என்பதை அல்குர்ஆன் 33ஆம் அத்தியாயத்தின் 66,67,68 ஆகிய 3 வசனங்களைப் பார்வையிட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். இதே அத்தியாயத்தின் 21ஆம் வசனத்தில் நபி(ஸல்) அவர்களை மட்டுமே பின்பற்றும்படி படைத்தவன் கட்டளையிட்டிருப்பதையும் பார்வையிட்டு தெளிவு பெறுங்கள்.

தாங்கள் படும் வேதனையிலும் தொழுகையைப் பற்றிக் கவலைப்படும் சகோதரியே! தங்களுக்கேற்பட்டுள்ள பிரச்சனைகளுக்கு இறுதித் தூதர் முஹம்மது(ஸல்) அவர்கள் தரும் அழகிய தீர்வைக் கண்ணுறுங்கள்.

**“ஃபாத்திமா பின்து அபீஹுபைஷ்(ரழி) அவர்கள் இரத்தப் போக்கு ஏற்பட்டவர்களாக இருந்தனர். (நபி(ஸல்) அவர்களிடம் வந்து தமக்கு ஏற்பட்டுள்ள நோய் பற்றிக் கேட்கிறார் கள்) அவர்களை நோக்கி நபி(ஸல்) அவர்கள். ‘அது மாதவிடாயாக இருந்தால், தெரிந்து கொள்ளக்கூடிய கரிய நிறத்தில் அமைந் திருக்கும். அந்தச் சந்தர்ப்பத்தில் தொழு கையை விட்டு விடுவீராக. அது அல்லாத மற்ற இரத்தமாக இருந்தால், ஒளூ செய்து விட்டுத் தொழுவீராக”** என்று கூறினார்கள்.

*அறிவிப்பவர் : ஃபாத்திமா பின்து அபீஹு பைஷ்(ரழி),*
*நூல் : நஸயீ*

**“ஃபாத்திமா பின்து அபீஹுபைஷ்(ரழி) அவர்களுக்கு இரத்தப் போக்கு ஏற்பட்டது. ‘அல்லாஹ்வின் தூதரே! எனக்கு விடாத உதிரப் போக்கு ஏற்பட்டுள்ளது. தொழுகையை விட்டு விடலாமா?’ என்று அவர் நபி(ஸல்) அவர்களிடம் கேட்டார்கள். அதற்கு நபி(ஸல்) அவர்கள், ‘அது ஒரு நோயேயாகும்; அது மாத விடாய் அல்ல. எனவே மாதவிடாய் ஏற்பட்டால் தொழுகையை விட்டு விடு. அது நின்று விட்டதும் இரத்தத்தின் சுவடுகளைக் கழுவி விட்டு ஒளூ செய்து கொள்’ என்று கூறினார்கள். ‘அப்படியானால் (மாதவிடாய் நின்று விட்டால்) குளிப்பது அவசியம் இல்லையா?’ என்று வினவப்பட்டது. அதற்கு நபி(ஸல்) அவர்கள், ‘(குளிக்க வேண்டும் என்பது) எவருக்கும் சந்தேகம் இல்லாத ஒரு விஷயம் அல்லவா?’** என்று பதிலளித்தார்கள்.

*அறிவிப்பவர் : ஃபாத்திமா பின்து அபீஹுபைஷ்(ரழி),*
*நூல் : நஸயீ*

**“அல்லாஹ்வின் தூதரே! நான் (இரத்தப் போக்கிலிருந்து) சுத்தமாவதே இல்லை. நான் தொழுகையை விட்டு விடவா?” என அபூஹு பைஸ் அவர்களின் மகள் ஃபாத்திமா(ரழி) அவர்கள் நபி(ஸல்) அவர்களிடம் வினவினார் கள். அதற்கு நபி(ஸல்) அவர்கள், ‘அது ஒரு**

**நோய்தான் மாதவிடாய் அல்ல. மாதவிடாய் வந்தால் தொழுகையை விட்டுவிடு. மாதவிடாய் (கால) அளவு முடிந்து விட்டால் உன்னிடமிருந்துள்ள இரத்தத்தைச் சுத்தப் படுத்தி தொழுது கொள்”** என கூறினார்கள்.

*அறிவிப்பவர் : அன்னை ஆயிஷா(ரழி), நூல்கள் : புகாரீ, முஸ்லிம், அபூதாவூத், திர்மிதி, நஸயீ, முஅத்தா*

மாதவிடாய் கால அளவை இரத்தப் போக்குள்ள வர்கள் அறிந்து கொள்ளும் விதத்தை கீழேயுள்ள ஹதீஸ் தெளிவு படுத்துகிறது.

**“நபி(ஸல்) அவர்களின் காலத்தில் ஒரு பெண் இரத்தப் போக்குடையவராக இருந்தார். அவருக்காக நான் நபி(ஸல்) அவர்களிடம் மார்க்கத் தீர்ப்பு கேட்டேன். இந்நிலை ஏற்படும் முந்தைய மாதத்தில் அவளுக்கு மாதவிடாய் ஏற்பட்ட (நாட்களின்) இரவு, பகலை எண்ணட்டும் (நடப்பு) மாதத்தில் அந்த (நாட்களின்) அளவு வந்ததும் தொழுகையை விட்டு விடட்டும். அந்த நாள் சென்றதும் குளிக்கட்டும். பின்பு துணியால் இறுகக் கட்டிக் கொள்ளட்டும். பின்பு தொழட்டும்”** என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

***அறிவிப்பவர் : அன்னை உம்முசலமா(ரழி),***
***நூல்கள் : அபூதாவூத், நஸயீ, முஅத்தா***

இரத்தப் போக்கு மட்டும் இருக்கும் நாட்களில் ஒளூ செய்து விட்டுத் தொழலாம். இரத்தப் போக்குடைய நாட்களில் இரத்தம் அதன் நிறத்திலல்லாமல், தெரிந்து கொள்ளக்கூடிய கரிய நிறத்தில் இருந்தால் மாதவிடாயும் அப்போது ஏற்பட்டிருப்பதை அறிந்து கொள்ளலாம். இப்படி நிகழும் போது தொழுகையை விட்டுவிட வேண்டும். இது ஒரு வழி; அடுத்த படி, இரத்தப் போக்குடைய நாட்களில் சென்று முடிந்த முந்தைய மாதத்தின் மாதவிடாய் ஆரம்பித்து முடிவுற்ற நாட்களின் இரவு பகல்களை கணக்கிட்டு, அதே அளவு இரவு, பகல் எண்ணிக்கையைக் கணக்கிட்டு நடப்பு மாதத்தில் கையாண்டு, இறுதியில் குளித்து விட்டு துணியால் இறுகக் கட்டிக் கொண்டு தொழுகையை ஆரம்பித்து விடவேண்டும்.

மேலே குறப்பட்ட தீர்வு அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் முஸ்லிம்களுக்குக் கொடுத்த தீர்வு. தங்களுக்கு இறைத்தூதரின் போதனைகளில் நம்பிக்கை இல்லாவிட்டால், தாங்கள் மதித்துப் போற்றும் ஹஜ்ரத்களை அணுகுங்கள். விளையாட்டுத்தனமாக தீர்ப்புகள் கிடைக்கலாம்.

ஏனெனில் : **“தொழுகையில் அத்தஹிய்யாத்து ஓதி முடித்து ஸலாம் கொடுப்பதற்குப் பதிலாக, வேண்டுமென்றே பின் துவாரத்தின் வழியாக காற்று விட்டு தொழுகையை முடிப்பது கூடும். ஸலாம் கொடுக்க வேண்டியதில்லை”** என்று ஹனஃபி மத்ஹபின் சட்ட நூல்களான துர்ருல் முக்தார், ஹிதாயா, கன்ஸு, குதூரி, ஷரஹுல் விகாயா ஆகியவைகள் கூறுகின்றன.

அழகாக ஸலாம் கொடுத்து தொழுகையை முடித்துக் கொள்வது நபிவழி! அசிங்கமாக (வேண்டுமென்றே) குசு விட்டு தொழுகையை முடித்துக் கொள்வது மத்ஹபு வழி!

காற்றுப் பிரிந்தால் தொழுகை முறிந்து விடும் என்ற கருத்திலுள்ள நபிமொழியை நெஞ்சமுத்தமாக

கேலி செய்யும் சட்டங்கள்தான் மத்ஹபுகளின் சட்டங்கள். ஹஜ்ரத்மார்களை தங்களின் பிரச்சனைக்காக அணுகினால், மத்ஹபு அடிப்படையில் இது போன்ற கிறுக்குத்தனமான பதில்களைத் தந்தாலும் தரலாம்.

இப்போது சொல்லுங்கள்! தாங்கள் அல்லாஹ்வையும் அவன் தூதரையும் பின்பற்றி வாழும் முஸ்லிமா? அல்லது அல்லாஹ்வும், அவனது தூதரும் காட்டிதராத மத்ஹபைப் பின்பற்றி வாழும் ஹனஃபியா?

ஜனவரி 2005 அந்நஜாத்